## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 6/2018

இந்நீதிமன்றத்து இளநிலை உதவியாளர் திருமதி சி. நிர்மலா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயராமன் | மதம் | : இந்து |
| த/பெ | : மாரப்ப நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : எட்டியத்தாங்கல் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**17.07.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1, 2, 3, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. இந்த வழக்கில் சொல்லியுள்ள சொத்துக்கள் என்னுடைய சொத்துக்கள் என நான் குறிப்பிட்டு என் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை. என்னுடைய சொத்து எது என்பதை புல எண் குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் சொல்ல முடியாது. நான் தாக்கல் செய்துள்ள 17.02.2017 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் பூமிக்கு அடியில் குழாய்கள் புதைக்கப்பட்ட விவரம் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உண்மையிலேயே நான் சொல்வதுபோல் 30 வருடங்களுக்கு முன்பு பூமிக்கு அடியில் குழாய்கள் புதைக்கப்பட்டு இருந்தால் அந்த விவரம் ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கும் என்றாலும் பூமிக்கு அடியில் குழாய்கள் புதைக்கப்படாததால்தான் அந்த விவரம் சொல்லப்படவில்லை என்றாலும் சரியல்ல.

6. புல எண்.13/3சி 1ல் ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது என்றாலும் அதில் தண்ணீர் உள்ளது என்றாலும் சரிதான். புல எண்.13/3C1 க்கு அருகில் எனக்கு சொந்தமான நிலம் உள்ளதா என்றால் உள்ளது. புல எண்.9/6ல் ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் சரிதான். அதிலும் தண்ணீர் உள்ளது என்றால் சரிதான். புல எண். 9/6 சம்மந்தப்பட்டு எனக்கு சொந்தமான நிலங்கள் உள்ளது என்றால் ஆமாம். அந்த நிலங்களுக்கு புல எண்.9/6ல் இருந்து தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் சரிதான்.

பிராதில் சொத்துவிவரத்தில் சொல்லியுள்ள பீமன், நரசிம்மலு நாயுடு, முத்தம்மாள், ராமலிங்க நாயுடு, கோவிந்த நாயுடு, துரைசாமி, சரோஜம்மாள் ஆகியோர்களை நான் விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை.

7. மேற்சொன்ன நபர்களின் நிலங்களில் பூமிக்கு அடியில் தண்ணீர் குழாய் பதிக்கப்பட்டு செல்கிறது என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் நிலத்தில் பூமிக்கு அடியில் தண்ணீர் குழாய் பதிக்க வெளிப்படையான அல்லது உட்கிடையான அனுமதியை எனக்கோ என் அண்ணனுக்கோ எந்த காலத்திலும் பிரதிவாதி கொடுத்ததேயில்லை என்றால் சரியல்ல. ஆஞ்சியம்மாள் சம்மதம் தெரிவித்ததாக கூறுவதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் எழுத்துப்பூர்வமான ஆவணம் இல்லை. ஆஞ்சியம்மாள் என் அண்ணனிடம் நீயும் என் பிள்ளைதானே பைப்லைன் போட்டுகோ என்று சொன்னார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிலங்களுக்கு புல எண்.9/6லும் புல எண்.13/3சி 1லும் தனித்தனியாக ஆழ்துளை கிணறிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்பட்டு விவசாயம் செய்து வருகிறோம் என்றாலும் எனக்கு வழக்கு சொத்தில் குழாய் பழுப்பு கொண்டு செல்ல அவசியமே இல்லை என்றாலும் சரியல்ல.

8. பிரதிவாதி கனகம்மா சத்திர காவல் நிலையத்தில் புகார் அளித்தபோது நான் குழாய் எடுத்துவிடுகிறேன் என்று கூறிவிட்டு தற்போது பொய்யாக இந்த வழக்கை தாக்கல்ர செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும்போது நானும் வந்திருந்தேனா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் வந்திருந்த சமயம் நான் புல எண்.13/3C1 ல் இருந்து புல எண்.9/6க்கு தண்ணீர் செல்லும் குழாய் நான் காட்டவில்லை என்றால் வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையரிடம் நான் அவ்வாறு குழாயை காட்டவேயில்லை என்றால் காட்டினேன். நீதிமன்ற ஆணையர் இதற்கும் அதற்கும் சம்மந்தமேயில்லை என கூறிவிட்டார். நான் உண்மையான உரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

9. புல எண்.9/6க்குதான் எனக்கு மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். புல எண்.13/3C1 சொத்திற்கு எனக்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. 17.11.2017ம் தேதியிட்ட உயிலை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் நிலத்தில் பூமிக்கு அடியில் தண்ணீர் குழாய் பதிக்க

வெளிப்படையான அல்லது உட்கிடையான அனுமதியை எனக்கோ என் அண்ணனுக்கோ கொடுக்காத நிலையில் என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை மட்டும் கோரும் என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் பிராதுவிவரங்கள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லும் சாட்சியம் நீதிமன்ற ஆணையர் அறிக்கை வரைபடத்திற்கு எதிரானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குழாய் பதிப்பதற்குரிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வைத்துக்கொண்டு உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)